# அறபு மொழி கற்றலில் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான மதிப்பீடு இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழி பீட முதலாம் இரண்டாம் மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு.

**ஏ. ஆர். எப். றஸாதா [(1)] , ஏ ஏ எப் நுஹா [(2)] , எம் ஐ எப் சுபா [(3)]**

[1] கலை கலாசார பீடம், இலங்கைத் தென் கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில், இலங்கை,

[2 & 3] இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடம் , இலங்கைத் தென் கிழக்குப் பல்கலைக்கழகம்,ஒலுவில்

razatha6@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

அறபு மொழி என்பது சர்வதேச ரீதியாக காணப்படுகின்ற பல நூற்றுக் கணக்கான மொழிகளுள் ஓர் உயர் நிலை பெற்றுக் காணப்படும் சர்வதேச மொழியாகும். இதனைத் தாய் மொழியாகவும் இரண்டாம் மெயாழியாகவும் கொண்ட முஸ்லீம்களும் முஸ்லீம் அல்லாதவர்களும் வாழ்கின்ற நாடுகள் பல காணப்படுகின்றன. தற்காலத்தில் இவ்வனைத்து நாடுகளிலும் அறபு மொழியினை விருத்தி செய்வது தொடர்பான பல்வேறுபட்ட கலந்துரையாடல்கள் நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னேற்பாடுகள் என்பன பரந்த நோக்கோடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வகையில் இவ்வாய்வு அறபு மொழி கற்பதில் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான மதிப்பீட்டினை மேற்கொள்ளுதல் அவற்றிற்கான தீர்வினை வழங்குதல் எனும் பிரதான மற்றும் துணை நோக்கங்களைக் கொண்டுள்ளது. இலங்கைத் தென் கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடத்தின் அறபு மொழித்துறை முதலாம் இரண்டாம் வருட மாணவர்களுடனான வினாக் கொத்து முறைமையினை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. பெறுபேறுகளின் படி மாணவர்களின் அறபு மொழியாற்றலானது நடு நிலைத் தரத்தினை கொண்டுள்ள அதேவேளை அவ்வாற்றலானது மேலும் விருத்தி செய்யப்பட வேண்டும் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இது மாணவர்களின் அறபு மொழி கற்றல் தொடர்பில் எதிர் நோக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஆலோசனைகளை வழங்க வல்லது. என்பது ஆய்வாளர்களின் எதிர் பார்ப்பாகும்.

**திறவுச் சொற்கள்**: தாய் மொழி, இரண்டாம் மொழி, முஸ்லிம் அல்லாதவர்கள், நடுநிலை, வினாக் கொத்து

## 1. ஆய்வுப் பிரேரணை

அறபு மொழி என்பது மிக உயரிய இடத்தினைக் கொண்டிருக்கும் ஓர் சர்வதேச மொழியாகும். தற்கால உலகமயமாதலின் காரணமாக உலகம் ஒரு கிராமம் என்ற கொள்கை உருவாக்கப்பட்டு இன்று ஒவ்வொரு நாடுகளிலும் உள்ள ஒவ்வொரு தனி நபரும் ஏனைய நாட்டினது அரசியல், பொருளாதார, சமூகக் கொள்கைகளை அறிந்திருத்தல் அவசியம் என்ற நிலை உருவாகி விட்டது. இதனடிப்படையில் சர்வதேச மொழியான அறபு மொழியினையும் அனைவரும் தெரிந்திருத்தல் அவசியமாகின்றது. ஏனெனில் ஒரு நாட்டின் அரசியல் சமூக பொருளாதார நிலைகளை ஒரு நபர் அறிந்து கொள்ள வேண்டுமாயின் அந்நாட்டின் மொழியினை அறிந்திருத்தல் அவசியமாகும்.

அறப மொழி கற்பித்தல் ஒரு குறிப்பிட்ட பாடத்தினை மட்டும் கற்பிக்காது மேலதிகமான இலக்கண அறிவினையும் வாசிப்புத் திறனையும் அதிகப்படுத்தும் நோக்கில் காணப்பட வேண்டும். இதுவே நாம் எதிர் பார்க்கும் சிறந்த வளமான அறபு மொழியாற்றலைக் கொண்ட சமுதாயத்தை உருவாக்கும்

பாரியதொரு நிகழ்ச்சித் திட்டமாகக் காணப்படுகின்றது. எனவே அறபு மொழி தொடர்பாக மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவற்றினைத் தீர்ப்பதற்கு முன்வைக்கப்படுக் கூடிய ஆலோசணைகள் என்பது தெடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது காலத்தின் கட்டாயமாகக் காணப்படுகின்றது. இலங்கைத் தென் கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழி பீட அறபு மொழித் துறை மாணவர்கள் பாடசாலை மற்றும் மதரஸாக்களில் அறபு மொழி கற்ற மாணவர்களாகக் காணப்படுகின்றனர்.

இவர்கள் அறபு மொழியாற்றலில் நடுநிலைத் தரத்தினைக் கொண்டுள்ள அதேவேளை தமது அறபு மொழியாற்றலை விருத்தி செய்ய ஆர்வம் கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். எனவே அறபு மொழியினைக் கற்பதில் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவற்றிற்கான தீர்வுகளை இவ்வாய்வு கண்டறிய விளைகின்றது.

## 2. ஆய்வு நோக்கம்

இவ்வாய்வு முறையே ஒரு பிரதான நோக்கத்தினையும் ஒரு துணை நோக்கத்தினையும் கொண்டதாகக் காணப்படுகின்றது.

### 2.1 பிரதான நோக்கம்

அறபு மொழி கற்றலில் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளம் காணுதல்.

### 2.2 துணை நோக்கம்

அறபு மொழி கற்பதில் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து அது தொடர்பான தீர்வினைக் கண்டறிதல்.

## 3. ஆய்வு முறையியல்

இவ்வாய்வு இலங்கைத் தென் கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழி பீட முதலாம் இரண்டாம் வருட மாணவர்களிடையேயான வினாக் கொத்து முறை மூலம் இடம் பெற்றது. இவ்வாய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட வினாக்கொத்து பிரதான ஆறு பகுதிகளை உள்ளடக்கியது. முதலாவது பகுதி தகவல் அளிப்பவரது சுய விபரங்களையும் இரண்டாம் பகுதி அறபு மொழி தொடர்பான மாணவர்களின் கருதுகோளையும் மூன்றாவது பகுதி அறபு மொழி கற்றலின் முக்கியத்துவம் தொடர்பான மாணவர்களின் கருத்தையும் நான்காவது பகுதி அறபு மொழியாற்றலில் மாணவர்களின் நிலை மற்றும் அறபு மொழியாற்றலினை விருத்தி செய்ய கொண்டுள்ள ஆர்வம் மற்றும் அறபு மொழி கற்பதில் எவ்வாறான பகுதிகளில் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர் என்பது பற்றியும் அவற்றினை நிவர்த்தி செய்ய அவர்கள் முன்னெடுத்துள்ள முயற்சிகள் பற்றியும் அது எவ்வாறான முயற்சி என்பது பற்றியும் அம்முயற்சியில் அவர்கள் கண்ட பலன்கள் பற்றியதுமான விடயங்களை உள்ளடக்கியது. ஐந்தாவது பகுதி அறபு மொழியினை இலகுவாக பயில எவ்வாறான கற்பித்தல் முறையை எதிர்பார்க்கின்றனர் என்பது பற்றியும் ஆறாவது பகுதியாக அறபு மொழியைக் கற்பதற்கு எவ்வாறான வளங்கள் வாய்ப்புக்களை எதிர் பார்கின்றனர் என்பது தொடர்பான வினாக்களை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. பெறப்பட்ட தகவல்கள் யாவும் கணணி மென்பொருட்கள் மூலம் பகுப்பாய்வுக்குட் படுத்தப்பட்டது.

## 4. பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்


இவ்வாய்வு இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடத்தில் முதலாம் வருட மாணவர்களில் இருந்து 60% மற்றும் இரண்டாம் வருட மாணவர்களில் இருந்து 40% தகவல் தருணர்கள் தெரிவு செய்யப்பட்டு தகவல் திரட்டப்பட்டன. வினாக் கொத்திற்கு பதில் அளித்த அனைவரும் பெண்

மாணவிகள் என்பது குறிப்பிடத்தக்கது. பதினெட்டு மாவட்டங்களில் இருந்து வருகை தந்த மாணவர்களிடம் இவ்வினாக் கொத்துக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

## 4.1 அறபு மொழியாற்றல்

### 4.1.1 மாணவர்களின் அறபு மொழி ஆற்றல் தொடர்பான மதிப்பீடு


பதிலளித்த மாணவியர்களுள் அநேகமானோர் அறபு மொழியாற்றலில் சாதாரண அளவிலேயே புலமை பெற்றவர்களாகக் காணப்பட்டனர். மிகப் பெரும்பான்மையினர் ( 50% ) நன்று அதாவது நடுநிலையான தரத்தில் அறபு மொழியாற்றலினைக் கொண்டுள்ள அதேவேளை மிக நன்று அதாவது அறபு மொழியாற்றலில் சிறப்புத்தேர்ச்சியுடையோராக ( 30 % ) காணப்பட்டனர். குறைவான அளவினையுடையோர் ( 14 % ) அறபு மொழியாற்றலில் பலவீனமான நிலையில் காணப்படுகின்றனர். எனினும் ( 4% ) ஆனோர் தமது நிலை குறித்து எதுவித கருத்துக்களையும் வெளிப்படுத்த வில்லை.



வரைபடம் 4.1.1: மாணவர்களின் அறபு மொழி ஆற்றல் தொடர்பான மதிப்பீடு

## 4.2 மாணவர்களின் அறபு மொழி தொடர்பான கருத்து

இவ்வினாக் கொத்திற்குப் பதிலளித்தவர்களில் ( 20% ) ஆன தகவல் தருணர்கள் அறபு மொழியினை இலகுவான மொழியாக இனங்கண்டுள்ளனர். பெரும்பான்மையினர் ( 40% ) மிக முக்கியமான மொழியாக இனங்கண்டுள்ளனர். ( 26% ) கடினமான மொழியாகவும் இனங்கண்டுள்ளனர். இலகுவான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த மொழியாக ( 8% ) தகவல் தருணர்கள் இனங்கண்டுள்ளனர். ( 6% ) தகவல் தருணர்கள் கடினமான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த மொழியாக இனங்கண்டுள்ளனர்.




வரைபடம் 4.2: அறபு மொழி தொடர்பான மானவர்களது கருத்து

### 4.3 அறபு மொழியின் முக்கியத்துவம் தொடர்பாக மாணவர்களின் கருத்து

வினாக் கொத்துக்குப் பதிலளித்தவர்கள் அறபு மொழியின் முக்கியத்துவம் பற்றிக் கூறும் போது அறபு மொழியானது குர்ஆனிய மொழியாகும் இது ஈருலக வாழ்விற்கும் அவசியப்படும். இது சர்வதேச மொழியாகும். இது உயிரோட்டமான தொழுகையை நிறைவேற்றுவதற்கு மிக அவசியமாகும். தனித்துவம் வாய்ந்த மொழி சரளமாகப் பேசக் கூடியது. அல் குர்ஆன் மற்றும் அஸ்ஸுன்னாவை திறம்பட விளங்கத் துணை புரியக் கூடியதாகவும் அவற்றை வேறு மொழிகளில் மொழி பெயர்ப்புச் செய்யவும் உதவுகிறது. இதனைக் கற்பது கடமையாகும். சுவனத்தின் மொழியாகக் காணப்படுகின்றது. இஸ்லாத்தினைப் பற்றிய தெளிவினைப் பெறுவதற்கு மிக அவசியமான மொழியாகக் காணப்படுகின்றது. என்பன போன்ற கருத்துக்கள் வெளிப்பட்டன.


### 4.4 அறபு மொழி ஆற்றலை விருத்தி செய்ய மாணவர்கள் கொண்டுள்ள ஆர்வம்

வினாக் கொத்திற்குப் பதிலளித்தவர்களில் அறபு மொழியாற்றலினை விருத்தி செய்ய ஆர்வம் கொண்டவர்களை மதிப்பிடும் போது அதிகமானோர் ( 96%) அறபு மொழியாற்றலினை வருத்தி செய்ய ஆர்வம் கொண்டுள்ளனர் என்று குறிப்பிட்டனர். ( 4% ) சொற்பத் தொகையினர் அறபு மொழியாற்றலினை விருத்தி செய்ய ஆர்வமற்றுள்ளனர்.





### 4.5 அறபு மொழி கற்கும் போது மாணவர்கள் சவால்களை எதிர்நோக்கும் பகுதிகள்

மேலும் வினாக் கொத்துக்குப் பதிலளித்தவர்களிடம் அறபு மொழி கற்கும் போது அதில் எவ்வாறான பகுதிகளில் சவால்களை எதிர்நோக்குகின்றீர் என்ற வினாவினை வினவிய போது மிகப் பெரும்பான்மையானோர் ( 74% ) இலக்கணப் பகுதியிலும் எழுத்தில் ( 2% ) ஆனோரும் ஏனையவற்றில் ( 12% ) ஆனோரும் இலக்கணப் பகுதியிலும் ஏனைய பகுதியிலும் ( 6% ) ஆனோரும் இலக்கணப் பகுதி, வாசிப்புப் பகுதி மற்றும் எழுத்துப் பகுதியில் ( 2% ) ஆனோரும் சிக்கல்களை எதிர்நோக்குவதாகத் தெரிவித்தனர்.




**4.6 மாணவர்கள் தங்களது அறபு மொழி கற்பதில் உள்ள சாவால்களை நிவர்த்தி செய்ய மேற்கொண்ட முயற்சிகள்**

மேலும் வினாக் கொத்திற்குப் பதிலளித்தவர்களிடம் அறபு மொழியை கற்பதில் உள்ள சவால்களை நிவர்த்தி செய்வதற்கு முயற்சி செய்துள்ளீரா என வினவிய போது ( 78% ) ஆனோர் இம் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் என்றும் கால்வாசிக்கும் குறைவானோர் ( 22% ) இம் முயற்சியில் ஈடுபட வில்லை என்றும் கூறினர்.




தகவல் தருணர்கள் மேற் கொண்ட முயற்சிகள் பற்றி வினவும் போது அம் முயற்சிகளாக அதிகமான இலக்கணம் கற்றல், இலக்கணப் பயிற்சிகளைச் செய்தல், புலமை பெற்ற மாணவர்களிடம் கேட்டறிந்து கற்றல், சுய கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், அறபு மொழிப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளை வாசித்தல், இணையக் கல்வியினைப் பயன் படுத்தல், அறபு மொழிப் பேச்சுப் பயிற்சிகளில் ஈடுபடுதல், அறபு மொழிச் சொற்பொழிவுகளை செவிமெடுத்தல், நூல்களை அதிகம் கற்றல், விரிவுரைகள் மூலம் கற்றல் போன்றவற்றினை அடையாளப்படுத்தினர்.

மேலும் தகவல் தருணர்களிடம் அறபு மொழி கற்றலில் காணப்பட்ட சிக்கல்களை நிவர்த்தி செய்வதில் நீங்கள் மேற்கொண்ட முயறசிகளில் பயன் கண்டுள்ளீரா என வினவப்பட்ட போது அதிகமானோர் (

75% ) ஆம் என்ற பதிலையும் ஓரளவு என்ற பதிலினை ( 12.5% ) ஆனோரும் இல்லை என்ற பதிலினை மீதி ( 12.5% ) ஆனோரும் தெரிவித்தனர்.

**4.7 அறபு மொழியினை இலகுவாக பயில மாணவர்கள் எதிர்பார்க்கும் கற்றல் முறை**

மேலும் தகவல் தருணர்களிடம் அறபு மொழியினை இலகுவாகப் பயில எவ்வாறான கற்றல் முறையினை எதிர்பார்கின்றீர்கள் எனக் கேட்ட போது இயலாத மாணவர்களுக்கு மெல்லக் கற்றல் முறை, மேலதிக ஆழமான விளக்கங்களையும் சிறந்த தெளிவினையும் வழங்கக் கூடிய வகுப்புக்கள் நாடாத்தப்படல், மும் மொழி பெயர்ப்புடனான விரிவுரைகள், இலக்கணப் பகுதியில் சிறப்பான விளக்கங்களை வழங்குவதோடு அது சார் பயிற்சிகளை வழங்கக் கூடிய கற்றல் முறை, நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் கூடிய கற்றல் முறை, அதிகளவிலான அறபு மொழி சார் இணைப் பாட விதானங்களடன் கூடிய கற்றல் முறைமை, அறபு மொழி சார் பேச்சுப் போட்டி விவாதப் போட்டி போன்ற இன்னும் பல போட்டி நிகழ்வுகளைக் கொண்ட கற்றல் முறை, சுய கற்றல் முறை, மாணவர் மையக் கல்வி முறை, களப் பயணங்களுடனான கற்றல் முறை போன்ற கற்றல் முறையினை எதிர் பார்ப்பதாக அவர்களது பதில் அமைந்திருந்தது.

**4.8 அறபு மொழியினை இலகுவாக பயில மாணவர்கள் எதிர்பார்க்கும் வளங்கள் வாய்ப்புக்கள்**

மேலும் தகவல் தருணர்களிடம் அறபு மொழியினைக் கற்பதற்கு நீங்கள் எவ்வாறான வளங்கள் வாய்ப்புக்களை எதிர்பார்கின்றீர்கள் எனக் கேட்ட போது பரந்த பார்வையில் தெளிவான கற்பித்தல், இலகுவான நூற்கள், தரமான ஆசிரியர்கள், தொழில் நுட்ப உபகரணங்கள், குறிப்புக்கள், களப்பயணங்களுக்கான வாய்ப்புக்கள், கருத்தரங்குகள், புதிய பாட அறிமுகம், உயிரோட்டமான விரிவுரை மண்டபங்கள், புதிய நுட்ப முறைகளைக் கொண்ட கற்பித்தல் முறைமை, அறபு மொழி பேசும் சூழல், மேலதிக வகுப்புக்கள், போதியளவிலான பாடத்திட்ட முறைமை, பலவீனமான மாணவர்கள் மீதான விஷேட கவனிப்பு, சமூக வலைய தளங்கள் ஊடாக அறபு மொழியினைக் கற்பதற்கான வாய்ப்பு, அறபு மொழி சார் போட்டி நிகழ்ச்சிகள், அறபு ஆய்வு கூட வசதி, இலக்கணம் சம்மந்தமான தமிழ் மொழியில் உள்ள சிறந்த வழி காட்டல் குறிப்புக்கள், சிறந்த தரமான நூற்கள் அகராதி வசதி வாய்ப்புக்கள், அறபு மொழிக்கான தனியான தனித்துவமான ஒரு பீடம் போன்ற வசதி வாய்ப்புக்ளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்றமைந்தது.

**5. பரிந்துரை**

எங்களால் மேற்கொள்டப்பட்ட ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு அறபு மொழி கற்பதில் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினையினைத் தீர்ப்பதற்கான தீர்வுகளாக பின்வரும் பிரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன. அவை அறபு மொழியினைக் கற்கக் கூடிய மாணவர்களை அவர்களின் அறபு மொழிப் புலமைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரித்து கற்பிக்கப்படுவதோடு அதற்கான நேர அட்டவனைகள மற்றும் விரிவுரை மண்டபங்களை சிறந்த முறையில் அமைத்தல் வேண்டும். மேலும் விரிவுரை மண்டபங்களின் தரம் பேணப்படுவதோடு நவீன தொழில் நுட்ப வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். மேலும் மாணவர்களின் அறபு மொழி சார் இலக்கணப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய அவர்களுக்கு விளங்கக் கூடிய வகையில் பல்வேறு இலக்கணப் பயிற்சிகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல். சிறந்த அனுபவம் வாய்ந்த முதிர்சி பெற்ற விரிவுரையாளர்கள் மூலம் விரிவுரைகள் இடம் பெறுதல் வேண்டும். விரிவுரையின் போது அளவுக்கதிகமான விரிவுரைகள் இடம் பெறாது மாணவர்கள் சுய கற்றலில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். என்பனவாகும்.

**6. முடிவுரை**

ஆய்வின் படி இலங்கைத் தென் கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழி பீட அறபு மொழித் துறை மாணவர்கள் அறபு மொழியாற்றலில் நன்று என்ற சாதாரண தரத்தில் புலமை கொண்டுள்ள அதேவேலை பெரும்பான்மையான மாணவர்கள் இலக்கணப் பகுதியில் சவால்களை எதிர்நோக்குபவர்களாகவும் காணப்படுகின்றனர். இவ்வாறான நிலை இவர்களை அறபு மொழியில் பின்னடையச் செய்யும் ஒன்றாகக் காணப்படுகின்றது. இது அறபு மொழித் துறையின் வளர்ச்சிக்கு பாதகமான ஒன்றாகவும் அமையப் பெற்றுள்ளது. இதனை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல் காலத்தின் கட்டாயமாகக் காணப்படுகின்றது.

## References


**01)** அப்துர் றஹ்மான், (2015). ''உலக அறபி மொழி தினமும் அறபி மொழியின் முக்கியத்துவமும்'', (01.07.2018), from vidivelli.lk/article/1580-உலக-அறபி-மொழி-தினமும்-அறபி-மொழியின்-முக்கியத்துவமும்

**02)** ஜாபிர் காசிம், (2013). ''அறபு மொழி அறிவின் முக்கியத்துவம்'', (01.07.2018), from ipcblogger.net/mjabir/அறபு-மொழி-அறிவின்-முக்கி

**03)** மார்லின் மரிக்கார், (2013). ''அறபு மொழி அறிவின் முக்கியத்துவம்'', (01.07.2018), from archives.thinakaran.lk/2013/11/29/?n=1311291

**04)** இனாமுல்லாஹ், (2016). ''அறபு மொழி கற்கைகளை இலங்கையில் சர்வதேச தரங்களுக்கு ஏற்ப மேன்படுத்தல் அவசியமாகும்'', (01.07.2018), from inamullah.net/?p=238

**05)** இனாமுல்லாஹ் முஹைதீன், (2015). ''அறபு மொழி கற்கைகளை இலங்கையில் சர்வதேச தராதரங்களுக்கு ஏற்ப மேன்படுத்தல் அவசியமாகும்'', (01.07.2018), from srilankamuslims.lk/அறபு-மொழி-கற்கைகளை-இலங்கை